பல்வேறு முறைகேடுகள்

# ‘நீட்’ தேர்வு முடிவு குறித்து பாரபட்சமின்றி விவாதிக்க வேண்டும்!

## மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா வலியுறுத்தல்!

**புதுடெல்லி, ஆக. 1-**

**அண்மையில் வெளியான நீட் தேர்வு முடிவுகள் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி உள்ளன. யு.பி.எஸ்.சி. தேர்வு எழுதிய மாணவர்கள் குறித்து விவாதிக்கும் மாநிலங்களவையில்‘நீட்’ தேர்வு குறித்தும் விவாதிக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் திங்களன்று கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேசுகையில் வலியுறுத்தினார்.**



மாநிலங்களவையில் கழக குழுத் தலைவர் திருச்சி சிவா பேசியது வருமாறு:

மறைந்த மாணவர்களின் குடும்பத்தாருக்கு இரங்கல் தெரிவிக்கும் இந்த அவையில் நானும் எனது இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இதில் பேசுவதற்காக எனக்கு வாயப்பு அளித்தமைக்காக நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். நடந்த அந்த சம்பவத்திற்காக என் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது போன்ற சம்பவங்கள் மீது பேசுவதற்காக இனி இந்த அவையில் தனியாக சிறு விவாதமே நடத்தலாம் என்கிற ஆலோசனையையும் தெரிவிக்க விரும்புகிறேன். அப்போதுதான் உறுப்பினர்கள் தங்களது இரங்கலை தெரிவிக்க வாய்ப்பும் கிடைக்கும். அதற்காக இதையே முன்னுதாரணமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

### விவாதங்கள் நடத்த வேண்டுகோள் விடுப்போம்!

தற்போதைய நிலையில் இந்த அவை முடியும் தருவாயில் இருப்பதால், அடுத்த வாரத்தில் எதிர்க்கட்சிகளின் விருப்பத்திற்கிணங்க இச் சம்பவம் தொடர்பாக தனியான ஒரு விவாதமாகவே எடுத்துக் கொள்ளலாம். இது தொடர்பாக உங்களுக்கு கோரிக்கையாகவும் தெரிவிக்கின்றோம்.

தொடக்க நாள் முதல் கொண்டே மாநிலங்களவையில் அலுவல்கள் தொடங்கும் முன்னர், பல்வேறு கட்சித் தலைவர்கள் சந்தித்து, வழக்கமான அலுவல்களுடன் சில முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து சிறு விவாதங்கள் நடத்த வேண்டுகோள் விடுப்போம். அவசரப் பிரச்சினைகள் குறித்து அப்போது தான் எதிர்க்கட்சியினர் எடுத்துரைக்க வாய்ப்பாக இருக்கும். அமைச்சர்களும் பதிலளிக்க முடியும். அதன் காரணமாக சில தீர்வுகளும் கிடைக்கும்.

எது எப்படியோ, எங்களது நோட்டீசுகளை ஏற்றுக்கொண்டு. அடுத்த வாரம் இது குறித்து விவாதம் நடத்த ஒப்புக் கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய சந்தேகமெல்லாம், யு.பி.எஸ்.சி. மையப் பிரச்சினைகள் குறித்து இங்கு விவாதம் எடுத்துக் கொள்ளும் நேரத்தில், நீட் பயிற்சி மையத்தில் நடைபெறுவது குறித்து ஆளும் கட்சியினர் எப்படி செயல்படுவார்கள் என்று தெரியவில்லை.

இங்கே ஆளும் கட்சி வரிசையில் உள்ளவர்கள் பல்வேறு கவன ஈர்ப்பு தீர்மானங்களையும் ஒத்தி வைப்புத் தீர்மானங்களையும் கொடுக்கின்றனர். அது பற்றி விரிவாக பேச விரும்பவில்லை. இது தொடர்பாக அரசியல் பேசவும் விரும்பவில்லை.

### சில தகவல்கள் வெளியே வருவதேயில்லை!

தலைநகரில் நடக்கும் இது போன்ற பிரச்சினைகள் நம் கவனத்திற்கு உடனுக்குடன் வந்து விடுகிறது. செய்தி நிறுவனங்களும் ஊடகங்களும் கூட உடனுக்குடன் அவைகளை வெளியிட்டு விடுகின்றன.

ஆனால் தொலைதூர கிராமங்களில் நடக்கின்ற சம்பவங்கள் குறிப்பாக வீடுகளிலோ பண்ணைகளிலோ 7 வயது 10 வயது சிறுமிகள் எல்லாம் பாலியல் தொல்லைகளுக்கு ஆளாவது துன்புறுத்தப்படுவது குறித்த தகவல்கள் வெளியே வருவதே இல்லை.

அப்பெண்களின் குடும்பத்தார் ஒவ்வொருவரும் கதறுகின்றனர். கண்ணீர் விடுகின்றனர். பாதிப்பிற்குள்ளாகின்றனர். ஆனால் அது குறித்து ஊடகங்கள் தகவல்களை தருவதில்லை. முடக்கப்பட்டு விடுகின்றன.

சம்பவங்கள் எங்கு நடந்தாலும் அது தலைநகரில் ஆகட்டும், மாநகரங்கள், நகரங்களில் ஆகட்டும், கிராமங்கள், ஊரகப் பகுதிகளில் ஆகட்டும், எங்கு நடந்தாலும் அது அங்கேயே இருந்து விடக்கூடாது.

நான் மீண்டும் மீண்டும் இங்கே வலியுறுத்த விரும்புவது இதுதான். தமிழ்நாட்டில் நீட் நுழைவு தேர்வு காரணமாக ஏராளமான தற்கொலைகள் நடந்து வருகின்றன. நீட் நுழைவுத் தேர்வு ஆரம்பித்த தினம் முதற்கொண்டே இந்த தற்கொலைச் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

குறிப்பாக அனிதா என்கிற ஒரு பெண் பள்ளித் தேர்வில் 1200க்கு 1176 மதிப்பெண் பெற்றும் நீட் தேர்வில் வெற்றி பெற வில்லை. காரணம் அந்தப் பெண்ணால் நீட் பயிற்சி வகுப்பில் சேர்ந்து படிக்க இயலவில்லை. அதற்கும் காரணம் ஏழைகள் அங்கு சேர்ந்து படிக்க முடியாது. நீட் தேர்வு முறை என்பது முழுக்க முழுக்க முற்றிலும் மாறுபட்ட தேர்வு முறையாகும்.

### ‘நீட் தேர்வு தேவையா? என்பதே பெரிய கேள்வி!

அப்படிப்பட்ட நிலையில் ஏழைகளால் நீட் தேர்வில் வெற்றி பெற முடிவதில்லை. சிறு வயது முதலே நன்கு படித்து வந்த அனிதா என்ற பெண், அந்தக் குக்கிராமத்தில், ‘நான் டாக்டராகப் போகிறேன்’; “நான் டாக்டராகப் போகிறேன்’ என்று சிறு வயது முதற் கொண்டு சொல்லி வந்தவள் பள்ளியில் நல்ல மார்க் எடுத்தும் நீட் தேர்வில் வெற்றி பெற முடியவில்லை.

அந்தப் பெண்ணின் கனவு கலைந்து போனது. வேறு வழியின்றி அனிதா என்கிற அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டாள். எனவேதான் நீட் தேர்வு முறை குறித்து விவாதிக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் நீட் தேர்வு தேவையா என்பதே ஒரு பெரிய கேள்வி.

பனிரெண்டு ஆண்டுகள் கடுமையாக இரவு பகலும் படித்து - நல்ல மார்க் பெற்றும் மருத்துவம் சேர நீட் தேர்வில் வெற்றி பெற வேண்டும். நீட் தேர்வு முறையோ வழக்கமான பள்ளித் தேர்வைவிட முற்றிலும் மாறுபட்டதாகும். அப்படிப்பட்ட இரண்டரை மணி நேர நீட் தேர்வு எதிர்கால மருத்துவ மாணவர்களின் தகுதியை நிர்ணயம் செய்கிறது என்றால், வருத்தப்படுவதைத் தவிர வேறென்ன சொல்வது?

எனவேதான் சொல்லுகிறேன். இந்த நீட் தேர்வு என்பது பிரச்சினைக்குரிய ஒன்று. கடந்த ஆண்டு நடந்து, தற்போது வெளியாகி உள்ள நீட் தேர்வின் முடிவின் படி 73 மாணவர்கள் முழு மார்க் (720/720) பெற்றுள்ளனர். அதிலும் ஒரு மையத்தில் மட்டும் 50 பேர் முழு மார்க் பெற்றுள்ளனர். இது எவ்வாறு சாத்தியம்? பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளன.

இது பற்றி எல்லாம் விவாதிக்க வேண்டும் என்று விரும்பு கிறேன். இது மிகவும் கடுமையான ஒன்று இப்போதே கூட விவாதிக்கலாம்.

இதற்கு டெல்லி மாநில அரசே பொறுப்பு என்று இங்கே குறிப்பிட்டார்கள். அது எவ்வாறு மாநில அரசை பொறுப்பாக குறிப்பிட முடியும். இங்குள்ள அமைச்சர் ஒரு முடிவெடுக்கிறார் என்றால், அதை அங்குள்ள தலைமைச் செயலாளர் வேறு விதமாக முடிவெடுக்கிறார்.

டெல்லியில் பெயரளவிற்குத் தான் முதலமைச்சர் இருக்கிறார். துணை நிலை ஆளுநருக்குத்தான் முழு அதிகாரம் உள்ளது. டெல்லியைப் பொறுத்தவரை இதுதான் நிலை. முதலமைச்சரின் முடிவு தூக்கி எறியப்படுகிறது. அப்படி இருக்கும் போது டெல்லியில் உள்ள மாநில அரசு தான் பொறுப்பு என்று கூறுவது எந்த வகையில் பொருத்தம்?

எனவே முழுக்க முழுக்க துணை நிலை ஆளுநர்தான் டெல்லியைப் பொறுத்தவரை பொறுப்பேற்க வேண்டும். அவருக்குத் தான் அனைத்து உரிமைகளும் உள்ளன. கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது தெரிவித்துள்ளேன். இன்றைக்கோ அல்லது நாளைக்கோ இது தொடர்பாக மசோதா கொண்டு வரப்படலாம். அப்போது டெல்லியின் பொறுப்புக்கு நீங்கள் வந்தால் அப்போது உங்கள் நிலை என்ன? ஒன்றிய அரசு ஒரு கருத்தில் இருக்கும். துணை நிலை ஆளுநர் ஒரு கருத்தில் இருப்பார். நீங்கள் முதல்வராக இருந்தால், முதல்வராக செயல்பட முடியாது. துணை நிலை ஆளுநர் தான் முடிவெடுப்பார்.

எனவேதான் சொல்கிறேன். நீங்கள் ஒரு சட்டத்தை கொண்டு வருகிறீர்கள் என்றால், முதலில் அது குறித்து ஆழ்ந்து முடிவெடுங்கள். எதிர்காலம் குறித்தும் நடைமுறை சாத்தியக் கூறுகள் குறித்தும் பரிசீலியுங்கள். இது தொடர்பாக மாநில அரசை குறை கூற முடியாது. துணை நிலை ஆளுநரைத்தான் குறை கூற வேண்டும்.

எனவே இன்றைக்கு நாம் எடுக்கும் முடிவு, நகரத்தாருக்கும் கிராமத்தாருக்கும். ஏழைக்கும் பணக்காரனுக்குமாக பொதுவானதாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.



மேட்டூர் அணையிலிருந்து காவிரி உபரிநீரை நீரேற்று மூலம் ஏரிகளுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, நேற்று (31.07.2024) தொடங்கி வைத்தார். உடன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர். எஸ்.சதாசிவம், மேட்டூர் சார் ஆட்சியர் திருமதி நே.பொன்மணி, திருச்சி மண்டல நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் தயாளகுமார், மேல் காவிரி வடிநில வட்ட கண்காணிப்புப் பொறியாளர் இராமலிங்கம், மற்றும் விவசாயிகள் உள்ளனர்.

சோ.பா. மலர்வண்ணன் ஏற்பாட்டில்! திருக்குவளை பள்ளியில்

# பள்ளி அளவில் முதல் மூன்று இடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப்பரிசு!

## மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் வழங்கினார்!

*நாகை ஆக.1*

*நாகை மாவட்டம் திருக்குவளை கல்வி வளர்ச்சி அறக்கட்டளை சார்பில் கீழையூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சோ.பா. மலர் வண்ணன் ஏற்பாட்டில் திருக்குவளை அஞ்சுகம், முத்துவேலர் மேல்நிலை பள்ளி மற்றும் கலைஞர் படித்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு இரண்டு பள்ளிகளிலும் பள்ளி அளவில் வகுப்புகளில் முதல் மூன்று இடம் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு தொகை மற்றும் 1050 மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கும் விழா அஞ்சுகம், முத்துவேலர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.*

*விழாவிற்கு கீழையூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளரும், கல்வி வளர்ச்சி அறக்கட்டளை தலைவர் சோ.பா. மலர் வண்ணன் தலைமை தாங்கினார்.*

*தி.மு.க. மாநில இளைஞர் அணி துணைச் செய்யாளர் என்.இளையராஜா, திருக்குவளை ஊராட்சி மன்ற தலைவர் இல. பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியர் பிரதாப் வரவேற்றார்.*

*திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மற்றும் அஞ்சுகம், முத்து வேலர் மேல்நிலைப்பள்ளியில் படிக்கு மாணவ, மாணவிகளுக்கு வகுப்பு அளவில் முதலிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு தொகை மற்றும் பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா மற்றும் எழுதுப்பொருட்களை நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் வழங்கினார்.*

*விழாவில் பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார், தலைஞாயிறு ஒன்றியக்குழு தலைவர் ஆர்.ஜி.தமிழரசி, ஒன்றிய தி.மு.க.*

*பொருளாளர் சண்முக சுந்தரம், ஒன்றிய துணைச் செயலாளர் பார்த்திபன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் வர்த்தகர் அணி வி.எம். கே.பாலாஜி, இலக்கிய அணி குவளைகணேசன், விவசாயத் தொழிலாளர் அணி பி.தியாகராஜன், தொண்டர் அணி ஜோதி பாசு, விவசாய அணி செந்தில், வழக்கறிஞர் அணி பூவைமுருகு, ஒன்றியக் குழு உறுப்பினர் சுதா அருணகிரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

# ஒழுங்கு நடவடிக்கை
# கழகத்திலிருந்து நிரந்தரமாக நீக்கம்!


### தலைமைக் கழக அறிவிப்பு

இராமநாதபுரம் மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு துணைத் தலைவர் கா.செய்யது இப்புராஹிம், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் நிரந்தரமாக நீக்கி (Dismiss) வைக்கப்படுகிறார். இவரோடு கழகத்தினர் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** — **துரைமுருகன்**
சென்னை- 600 018. — பொதுச்செயலாளர்,
நாள்: 30.07.2024. — தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எம்.துரைசாமி
### ஆகஸ்ட் 1 (2020)



**தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு புழல் பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.**

**புழல் ஒன்றியச் செயலாளராகவும், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட பொருளாளராகவும், அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**மூன்று முறை நாரவாரிகுப்பம் பேரூராட்சி மன்றத் தலைவராகவும், மூன்று முறைமாதவரம் நகர்மன்ற உறுப்பினராகவும் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். நெல்,அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

கேரள மாநிலம்- வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த

# கல்யாணகுமார் - குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

*சென்னை, ஆக.1-*

*கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.*

*அதன் விவரம் வருமாறு:-*

*கேரள மாநிலம், வயநாடு மாவட்டம், சூரல் மலையில் பணியாற்றி வந்த நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், சேரங்கோடு 1 கிராமம், கொல்லிஅட்டி, அம்பேத்கர் நகரைச் சேர்ந்த கல்யாணகுமார் (வயது 52) த/பெ.முருகையா என்பவர் நேற்று (30.07.2024) அதிகாலை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தார் என்ற துயர மான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.*

*இச்சம்பவத்தில் உயிரிழந்த கல்யாணகுமார் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், காலம்சென்ற கல்யாணகுமார் அவர்களின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.*

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.*




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் நேற்று முன்தினம் (30.07.2024) சென்னை மாநில செய்தி நிலையக் கூட்டரங்கில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய மண்டல இணை இயக்குநர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், மற்றும் செய்தித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருவாலங்காட்டில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடக்கம்!

திருவள்ளூர், ஆக.1–

முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டமான மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி திருவள்ளூர் தொகுதி திருவாலங்காடு கிழக்கு ஒன்றி யத்திற்குட்பட்ட இலட்சுமிவிலாசபுரம், ஒரத்தூர், பாகசாலை, சின்னமண்டலி, களாம்பாக்கம், குப்பம் கண்டிகை, பெரிய களக்காட்டூர், அரிச்சந்திராபுரம், தொழுதாவூர், சின்னம்மாபேட்டை ஆகிய ஊராட்சிகளுக்காக சின்னம்மா பேட்டையில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர் ஐ.ஏ.எஸ்., தலைமையில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அரசு துறைகளின் மாவட்ட, ஒன்றிய அளவிலான அலுவலர்கள், திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ். மகாலிங்கம், ஒன்றிய குழு துணைத் தலைவர் சுஜாதா மகாலிங்கம், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் விஜயகுமாரி சரவணன், மாவட்ட துணை செயலாளர் சி.ஜெயபாரதி, ஒன்றிய குழு உறுப்பினர் டி.நந்தகுமார், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களாம்பாக்கம் எம். பன்னீர்செல்வம், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஆர். ராஜா, ஒன்றிய நிர்வாகிகள் ஜி.ரமேஷ், த.ஜீவஞானப்பிரகாசம், சண்முகம், நீலாவதி சீனிவாசன் உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள், 500 – ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற பொதுமக்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.